# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:58** **தேதி:-20.08.2015.**

## மாநில செயலக கூட்டம்

அன்பார்ந்த தோழர்களே,

**தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலக கூட்டம் 19.08.2015 அன்று மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா அவர்கள் தலைமையில் மாநில சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.**

**10.08.2015 முதல் 22.08.2015வரை நடைபெற்று வருகின்ற அஞ்சல் அட்டை இயக்கத்தை மாநில செயலக கூட்டம் பரிசீலித்தது. சிறப்பாக தமிழகம் முழுவதும் இந்த இயக்கம் நடைபெற்று வருவதற்கு பாராட்டு தெரிவித்ததோடு 22.08.2015க்குள் அனைத்து அதிகாரிகள், ஊழியர்கள் என சங்க வேறுபாடின்றி இந்த இயக்கத்தை முழு வெற்றிபெறச்செய்ய வேண்டுமென மாவட்ட/கிளை சங்கங்களை கேட்டுக் கொள்வது என தீர்மானித்தது.**

**அக்டோபர் 3 மற்றும் 4ஆம் தேதிகளில் நாகர்கோவிலில் நடைபெற உள்ள (BSNLCCWF) ஒப்பந்த தொழிலாளர்களின் மூன்றாவது அகில இந்திய மாநாட்டிற்காக நமது சங்க உறுப்பினர்கள் அனைவரிடம் இருந்தும் தலா ரூ 50/- வசூலித்து செப்டம்பர் 10ஆம் தேதிக்குள் தமிழ் மாநில சங்கத்திற்கு அனுப்பிட வேண்டும் என கிளை/மாவட்ட செயலாளர்களை கேட்டுக் கொள்கிறது. அதனை தமிழ் மாநில சங்கம், தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும். நம்மால் உருவாக்கப்பட்டு நம்மால் வளர்க்கப்படும் சங்கம் ஒப்பந்த தொழிலாளர் சங்கம். எனவே அவர்களின் அகில இந்திய மாநாட்டிற்கு உதவிடுவது நமது கடமையாகும். அதனையும் குறிப்பிட்ட தேதிக்குள் வழங்குவதும் அவசியம். எனவே கிளை/மாவட்ட சங்கங்கள் 10.09.2015க்குள் தங்களது நிதியினை தமிழ் மாநில சங்கத்திற்கு அனுப்பிட வேண்டும் என தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்